மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் இதற்காக பிரான்சிலிருந்து அறிஞர் குழுவை வரவழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அது போன்ற அவசியம் இல்லை. 'Marine Products Export Development Authority' ஒரு ஆராய்ச்சியை மெற்கொண்டு வருகிறது. விரைவிலேயே இதற்கு அந்த 'Marine Products Export Development Authority' தீர்வு காண்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று நெல்லூரிலுள்ள Research Centre-இல் கூட இறால் பண்ணைகளைத் தாக்கும் நோய்களைப் பற்றி முழுமையாகக் கண்டறிய முடியவில்லை. தமிழகத்திலுள்ள தூத்துக்குடியில் மீன்வள கல்லூரியில் இறால் குஞ்சுகளின் நோய் பற்றிய ஆய்வு மேற்கொண்டாலும் அதில் முழுமையான ஆய்வு நடத்துவதற்கும் இறால் பண்ணைகள் அதிகமாக உள்ள பகுதியில் இறால் மீன் வளர்ப்பு குறித்த முழுமையான ரிசர்ச் சென்டர் ஆரம்பிப்பதற்கும், நோய் தடுப்பு குறித்து உயர்நிலை கண்காணிப்பு வல்லுநர்கள் குழு அமைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. 'Central Institute of Brackish Water Aquaculture' என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. இந்த மாதிரியான வேலைகளையெல்லாம் இந்த நிறுவனம் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 153, 154 மற்றும் 155 ஆகிய மூன்று அறிக்கைகளை இக்குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95-ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் முப்பது முதல் முப்பத்திநான்கு வரையிலான அறிக்கைகளை பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1995-96 —அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1995-96-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை அளித்தல். மாண்புமிகு நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)
A. வருவாய்க் கணக்கில் செலவு.	
1. நிலவரித் துறை	2,84,03
2. மாநில ஆயத் தீர்வைத் துறை	2,03,13
3. மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்— நிர்வாகம் ..	3,18,93
4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் ..	16,01,32
5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம்	96,59
6. பத்திரப் பதிவு	6,27,60
7. மாநிலச் சட்டமன்றம்	1,28,10
8. தேர்தல்கள்	13,67,28
9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ...	19,08,74
10. ப்ரல் வழங்கு திட்டங்கள்	1,61,11
11. மாவட்ட நிருவாகம்..	63,35,72